மகிழ்ச்சி மனதில் !

மலர்ச்சி முகத்தில் !!

# மகிழ்ச்சி

தஞ்சை மீனாட்சி மருத்துவமனை மாத இதழ்

தனிசுற்றுக்கு மட்டும்

## 77-வது குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது



பூவை அள்ளும் கையில் வாசமுண்டு
சேவை செய்யும் கையில்
தெய்வம் உண்டு !

ஜனவரி । பிப்ரவரி - 2026

மணம்-5, இதழ்-26

சாதனையின்
வயது 13

# குடியரசு தினம் கொண்டாட்டம் - 2026

























இந்தியாவின் 77-வது குடியரசு தினம் ஜனவரி 26-ஆம் தேதி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் மீனாட்சி மருத்துவமனையின் பொது மேலாளர் செயல்பாட்டுத் துறை & மார்க்கெட்டிங் துறை திரு. **S.சிவக்குமார்** அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து பேசினார். இந்த நிகழ்வில் எலும்பு மூட்டு சிகிச்சை மருத்துவர் **மரு.பார்த்திபன் வேதநாயகி** அவர்கள் மற்றும் நமது மருத்துவமனை ஊழியர்கள், துறை மேலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த விழாவில் அனைவருக்கும் மரக்கன்று வழங்கி குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஜனவரி & பிப்ரவரி - 2026

# தலைவரின் செய்தி



**அன்பிற்கினிய மீனாட்சி குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம்...!**

சனவரி 26, 2026 நமது இந்திய திருநாட்டின் 77-வது குடியரசு தின விழா. நமது தாய்த் திருநாடு, உலகத்தின் தலைசிறந்த ஜனநாயக நாடாக உருவாகுவதற்கு தேசியத் தலைவர்கள், தமது நாட்டின் சுதந்திரத்திற்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் பாடுபட்டு, நமது நாட்டிற்கு விடுதலையைப் பெற்று அரும்பாடுபட்டு ஆங்கிலேயர்களுடன் அகிம்சை வழியில் தீவிரமாகவும் போராடி உயிர் தியாகமும் செய்து பெற்றுத் தந்தனர்.

நமது நாட்டில் பல்வேறு சமூக மக்கள், பல்வேறு மொழிகள் பேசி, பல்வேறு சமயங்கள் சார்ந்து, பல்வேறு பழக்க வழக்கங்களைப் பின்பற்றி வாழ்ந்தாலும் இந்தியன் என்பதில் பெருமிதம் கொண்டு நாம் அனைவரும் சமமாக ஒற்றுமையாக வாழ்ந்து உலகத்தின் தலைசிறந்த ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம் தமக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சியான எதிர்காலத்தை உருவாக்கித் தந்துள்ளார்கள்.

அதுபோல நமது மீனாட்சி மருத்துவமனைக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பணியை, எந்த பொறுப்பில் இருந்தாலும் அனைவரும் ஒற்றுமையுடன் நம்மை நாடி வரும் நோயாளிகளின் வேதனை முகத்தில் புன்னகையை உருவாக்க நீங்கள் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வுடன் தங்களுக்குரிய பொறுப்புகளை செவ்வனே செய்து நோயாளிகளுக்கு முழுத்திருப்தியை உருவாக்கித் தந்து, மருத்துவமனையின் வளர்ச்சியில் நீங்களும் பங்கு கொண்டு வருகின்றீர்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனாட்சி மருத்துவமனை குடும்ப உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வுடன் உலகத்தர மருத்துவத்தை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தரமாகக் கிடைப்பதற்கு இந்தக் குடியரசு தின நன்னாளில் உறுதியேற்போம் என்று கூறி அனைவருக்கும் தமது இந்தியத் திருநாட்டின் **77-வது குடியரசு தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

வாழ்த்துகளுடன்

**டாக்டர். எஸ்.குருசங்கர்**

தலைவர், மீனாட்சி மருத்துவமனை, தஞ்சாவூர்.



# இணை மேலாண்மை இயக்குனரின் செய்தி

**அன்பிற்கினிய மீனாட்சி குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம்...!**

சனவரி 26, 2025 நமது இந்திய திருநாட்டின் 77-வது குடியரசு தின விழா நாம் அனைவரும் சமமாக ஒற்றுமையாக வாழ்ந்து, உலகத்தின் தலைசிறந்த சனநாயக நாட்டில் வாழ்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம். நமக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சியான எதிர்காலத்தை நம் நாட்டின் தேசியத் தலைவர்கள் நமக்கு உருவாக்கித் தந்துள்ளார்கள்.

கடந்த 13 ஆண்டுகளாக தம் மீனாட்சி குடும்ப உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வுடன், கருணை உள்ளத்துடன், நம்மை நாடி வரும் நோயாளிகளின் குறைகளை அறிந்து, அவர்களுக்கு உலகத்தரச் சிகிச்சையை, குறைந்த செலவில் வழங்குவதில் டெல்டா மாவட்டங்களில் நாம் அளப்பறிய சாதனையை நிகழ்த்தி வருகிறோம். அதற்கு சிகிச்சை பெற்றவர்கள். நமக்கு அளித்து வரும் ஆதரவும், அவர்களின் மூலமாக சிகிச்சை பெற நம்மை நாடி வரும் நோயாளிகளின் எண்ணிக்கையே சாட்சி

நம் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின், தேவையை அறிந்து உலகத்தர மருத்துவத்தை கருணை உள்ளத்துடன், காலதாமதமின்றி, உரிய சிகிச்சையை உடனுக்குடன் வழங்கவும் தொடர்ந்து நாம் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றவும், மென்மேலும் சிறந்த மருத்துவச் சிகிச்சைய தொடர்ந்து வழங்கவும் இந்த 77-வது குடியரசு தினத்தில் உறுதியேற்போம் என்று உங்களுக்கெல்லாம் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துகளுடன்

**திருமதி.காமினி குருசங்கர்**

இணை மேலாண்மை இயக்குனர்,
மீனாட்சி மருத்துவமனை, தஞ்சாவூர்.

மகிழ்ச்சி

## மகிழ்ச்சியின் அறிமுக உரை....!


பக்கம்

**மகிழ்ச்சியின் நுழைவாயில்** 1

**பணியாளர்களின் படைப்புகள்**

- "கிழவியும் கூடையும்" 2
- இது சாத்தியமா....? என்பதிலிருந்து பிறக்கிறது சாத்தியம்...! 3
- வதந்தி...(தீ)...! 4
- எண்ணங்களை உயர்வாக்குவோம்...!. 5
- எளியவரிடத்தில் இறைவனை காணலாம் 6
- இப்படியுமா...? ஒரு மனிதர்...! 7
- திருந்த வேண்டியது நாம் தான்...! 8
- இயற்கை வளங்களை காப்போம்.....! 9-10
- ஊர் குளங்களை பராமரிப்போம்...! 12

**ரிலாக்ஸ் ப்ளீஸ்**

- இல்ல... இல்ல... கொஞ்சம் ஓவரா தான் போகுது...! 11

**உணவே மருந்து**

- தெரிந்து கொள்ளுங்கள் - வைட்டமின் B12 13

**நமது மருத்துவமனையின் நேர்மையான சிகரங்கள்...** 14

**பணியாளர் மழலைகளின் சாதனைகள் & கைவண்ணங்கள்** 14-15

**நமது குடும்ப உறுப்பினர்களின் உன்னதமான நிகழ்வுகள்**

- ஆரோக்கியம் காக்கும் மீனாட்சியின் இரத்தக் கொடையாளர்கள் 16
- நமது குடும்ப உறுப்பினர்களின் திருமண நாள் கொண்டாட்டம் 16 -17


இன்னும் பல... உள்ளே ▶▶▶▶

## மகிழ்ச்சியின் நுழைவாயில்...




''அன்பிற்கினியீர்...! அகம் நிறைந்த வணக்கங்கள்.
நெஞ்சை அள்ளும் தஞ்சையில்
நன்செய் கொழிக்கும் தஞ்சையில்
காவிரி பாடும் தஞ்சையில்
மக்களுக்கான மருத்துவமனையாகத்
திகழ்வது நம் மீனாட்சி மருத்துவமனை''

மாமன்னன் இராசராசச் சோழனின் வானளாவி நிற்கும் கோபுரம் போல் தஞ்சையின் மருத்துவக் கோபுரமாகத் திகழ்வது நம் மீனாட்சி மருத்துவமனை நம் மருத்துவமனையின் சார்பில் நம் பணியாளர்களின் படைப்புத்திறனை வெளிக்கொண்டு வரும் வண்ணம் உங்களுக்காகவே தொடங்கப்பட்டிருப்பது தான் **மகிழ்ச்சி மாத இதழ்**. நம் 12-ம் ஆண்டுப் பயணத்தில் நாம் சாதித்ததும், சந்தித்ததும் அதிகம். நமது **மேதகு. அப்துல் கலாம்** அய்யா போன்ற மேதைகள் நம் மருத்துவமனைக்கு வந்திருப்பது பெரிய கோவில் கோபுரத்தில் பொறிக்கப்பட்ட **மெய்க்கீர்த்தி** போன்ற அழியாத புகழை நமக்கு கொடுத்துள்ளது.

| இந்தப் புகழ் மகுடத்தில் வைரங்களாகப் பணியாளர்கள் நீங்கள் ஜொலிக்கின்றீர்கள் |
|---|
| உங்கள் பெருமைகளை, உங்கள் திறமைகளை, உங்கள் எண்ணங்களை, உங்கள் உணர்வுகளை, படைப்பாக மகிழ்ச்சியில் பதிவிடுங்கள் |

உலகில் எந்த நிர்வாகமும் செய்யாத இந்த அரும்பணியை ஒரு பெரும் பணியாக நம் மருத்துவமனை தொடங்கி இருக்கிறது **பயன் படுத்துங்கள், பயன் பெறுங்கள்...** உங்கள் ஒவ்வொருவரின் உள்ளங்களில் மகிழ்ச்சி நிறையட்டும்.....! எண்ணங்கள் மிளிரட்டும்.....!

- சிறப்பாசிரியர்


ஒருங்கிணைப்பாளர் மற்றும் நெறியாள்கை

மரு. அரிமாணிக்கம், மரு. பார்த்திபன் வேதநாயகி, திரு. ச.சிவக்குமார், திரு. மு.ஹாஜா நஜுமுதீன், திரு. ம.பிரதாப்

புகைப்படங்கள் மற்றும் புத்தக வடிவமைப்பு

திரு. மு.பக்ருதீன் அலி அகமது


**இலக்கை நோக்கி செயல்படு**

## "வள்ளுவன் வாக்கு"

கேள்வி :-

**"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்"** - (குறள்: 416)

பொருள் :- எந்த அளவுக்கு நல்லவைகளைக் கேட்கிறோமோ,
அந்த அளவுக்கு நிறைந்த பெருமை தரும் - **( சுஜாதா உரை )**



## "கிழவியும் கூடையும்"

குறள் விளக்க கதை

கிராமம் ஒன்றில் **100 நாள் வேலைத்திட்டத்தின்** கீழ் பெண்கள் பலர் வேலை செய்துகொண்டிருந்தனர். ஒரு குளத்தின் கரையை கூடை மண்ணால் பலப்படுத்திக் கொண்டிருந்தனர். கலகலப்பாக பேசியபடி வேலை செய்துகொண்டிருந்த பல பெண்களில், கிழவி ஒருவரும் இருந்தார்.

வேலையின் இடையே ஒருத்தி, ''ஏ கிழவி, நேத்திக்கு எங்க ஆள காணோம்...?'' என கேட்க ''அதுவா, ஒரு வேலையா போயிருந்தேன்டி'' என்றார். ''அட, இதைவிட என்ன பெரிய வேலை உனக்கு...?'' திரும்பவும் கேட்க **"நம்ம ஊரு பள்ளிக்கூடத்தில் முதியோர்க் கல்வி நடத்துறாங்க, அதுல திருக்குறள் பாடம் படிச்சேன்டி"** என்று கிழவி சொன்னார். ''அட சாகப் போற வயசுல...! என்ன திருக்குறள் பாடம் உனக்கு...!! தேவையா...?'' ஏளனம் செய்ய, ''போடி இவள, உன்னையெல்லாம் அனுப்பிவிட்டுதாண்டி, இந்த கட்டை சாயும்...!'' கிழவி கதைக்க, திடுக்கிட்டு அவளோ, ''சரி கிழவி, எங்க, ஏதாவது ஒரு திருக்குறள சொல்லு பாப்போம்...?'' என கேட்க. ''அதுவா...! அதுவா...?'' கிழவி தயங்க, ''அதான், உனக்கு ஒன்னும் சொல்ல தெரியலையே கிழவி...! பேசாம வேலைய பாப்பியா...? பாடம் எதுக்கு...?'' கேலி பேச, கிழவி அமைதி கொண்டார்.

மாலையில் வேலை முடித்து கிளம்பும் நேரத்தில், ''கிழவி என்ன கம்முனு இருக்க...!'' மேலும் சீண்ட ''ஒன்னுமில்லை, நீ போயி அந்த **மண்கூடையில, குளத்து தண்ணிய அள்ளு...!''** கிழவி சொல்ல ''ஏ கிழவி, மண்கூடையில தண்ணியை எப்படி அள்ள முடியும்...?'' என கேட்க ''சொல்றத செய்டி..!'' கிழவி அதட்ட, அவளோ வேற வழியில்லாமல் மண்கூடையில் தண்ணீரை அள்ளிப் பார்த்தாள். கூடையில் தண்ணீர் தங்காமல் போனது... கிழவி மேலும் கூடையில் தண்ணீரை அள்ள வைத்தார். மூன்று முறை கூடையில் தண்ணீர் அள்ளிப்பார்த்துவிட்டு அவளோ.... **"உனக்கு புத்தி கெட்டுபோச்சா கிழவி...?"** என சத்தம் போட்டாள்.


அமைதி கொண்ட கிழவியோ, ''அடியே, மண்கூடையில தண்ணீர் தங்காது என்பது எனக்கும் தெரியும்...! அதற்காக உன்னை இதை செய்யச் சொல்லவில்லை...! **நீ செய்த செயலில் ஒரு நல்ல பாடம் உள்ளது** என்றார்.

''பாவி கிழவி..! என்ன பாடம் அது...?'' என்று அவள் கேட்க, ''அடியே, மண்கூடையில் முதல் முறை தண்ணீர் அள்ளுவதற்கு முன்பு கூடையில் நிறைய மண் ஒட்டி இருந்ததை நீ கவனித்தாயா...? பிறகு ஒவ்வொரு முறையும் நீ, தண்ணீர் அல்ல அல்ல மண்ணெல்லாம் கரைந்து கூடை பொலிவானதை பார்த்தாயா...? அதுபோல தாண்டி, **நல்ல செய்தியை கேட்கக்கேட்க நம்ம மனசுல உள்ள பழைய அழுக்கெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறைஞ்சு போகுமடி...!!** என்று கிழவி அறிவுறுத்தினார்.

குறிப்பு: **"நல்லாரை காண்பதுவும் நன்றே..!**
**நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே...!"** (ஔவை)

**மரு.பார்த்திபன் வேதநாயகி**
எலும்பு மூட்டு சிகிச்சை மருத்துவர்

# இது சாத்தியமா....? என்பதிலிருந்து பிறக்கிறது சாத்தியம்...!



ஒரு காலத்தில் அமெரிக்கா விண்வெளி போட்டியில் பின்தங்கியிருந்தது. மனிதனை விண்வெளிக்கு அனுப்பிய பெருமை சோவியத் யூனியனுக்கே சென்றது. அமெரிக்க மக்களிடையே நம்பிக்கை குறைந்து இருந்த நேரம் அது. அப்போது அமெரிக்க அதிபராக இருந்தவர் John F. Kennedy

ஒரு நாள், 1962-ஆம் ஆண்டு, ரைஸ் பல்கலைக்கழகத்தில் அவர் பேசினார். அவர் சொன்ன ஒரு வாக்கியம் அனைவரையும் அமைதியாக்கியது **"இந்த பத்து ஆண்டுகள் முடிவதற்குள் மனிதனை சந்திரனில் இறக்கி பாதுகாப்பாக பூமிக்கு திரும்பக் கொண்டு வருவோம்."** அந்த கூட்டத்தில் இருந்த விஞ்ஞானிகள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். **"இது சாத்தியமா....?" "நமக்குத் தொழில்நுட்பமே இல்லை...!"** என்று பலர் மனதில் நினைத்தார்கள். ஆனால் Kennedy தொடர்ந்தார்;

**"இது சுலபம் என்பதற்காக அல்ல. இது கடினம் என்பதால்தான் நாம் இதைத் தேர்ந்தெடுக்கிறோம்."** அந்த ஒரு இலக்கு ஒரு நாட்டின் கனவாக மாறியது. NASA முழு வேகத்தில் செயல்படத் தொடங்கியது. ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள், பொறியாளர்கள் ஒரே இலக்கை நோக்கி உழைத்தனர். தோல்விகள் வந்தன. விபத்துகள் நடந்தன. ஆனால் இலக்கு மாறவில்லை. 1969-ஆம் ஆண்டு... உலகம் சுவாசம் பிடித்துக் கொண்டது. **(Neil Armstrong)** சந்திரனில் காலடி வைத்தார்.


''ஒரு மனிதனுக்குச் சிறிய அடியெடுத்து... மனிதகுலத்திற்குப் பெரிய முன்னேற்றம்.'' Kennedy அப்போது உயிருடன் இல்லை. ஆனால் அவர் வைத்த Moonshot Goal ஒரு கனவைக் கொண்டுவந்து வரலாற்றை மாற்றியது.

கதை சொல்லும் பாடம்: **பெரிய கனவுகள் முதலில் சாத்தியமற்றதாகத் தோன்றும். ஆனால் துணிச்சலான இலக்கே உலகத்தை முன்னேற்றுகிறது.**

படித்ததில் பகிர்ந்து கொள்ளப் பிடித்தது
**திரு.ச.சிவக்குமார்,** பொது மேலாளர்
செயல்பாட்டுத் துறை

மகிழ்ச்சி

## வதந்தி...( தீ )...!



ஒரு முதியவர் பணி ஓய்வு பெற்றவர். வீட்டில் தனிமையில் இருந்தார். படித்தவர், மனைவி, பிள்ளைகள் இல்லை. ஆனால், கொஞ்சம் ''துடுக்குத்தனம்'' நிறைந்தவர். மற்றவர்களை எளிதாகக் குறைகூறுபவர். அவருடைய பக்கத்து வீட்டுக்கு புதிதாக ஒருவன் குடி வந்தான். அவனுக்கு ஆக்டிங் டிரைவர் வேலை. யாராவது தங்கள் காரை ஓட்ட டிரைவர் வேண்டும் என்று அழைக்கும்போது போவான். மற்ற நேரங்களில் வீட்டிலிருப்பான். இவருக்கு அவன் மேல் சந்தேகம். திடீரென்று நள்ளிரவில் கிளம்பிப் போகிறான்.. காலை 8 மணிக்கு வீடு திரும்புகிறான்...? சில நாள்களில் மாலையில் போகிறான்...? இரவில் வீடு திரும்புகிறான்...? ஒரு வேளை அவன் திருடனாக இருப்பானோ என நினைத்தார். இந்த எண்ணம் நாளாக நாளாக வலுப்பெற்றது. தன் நண்பர்களிடம் அவனைப் பற்றிச் சொன்னார்... காய்கறி, பழம் விற்க வருபவர்களிடம் தன் சந்தேகத்தைச் சொன்னார். **அந்த ஆள் திருடன்** என்கிற வதந்தி மெள்ளப் பரவியது.

ஒருகட்டத்தில், போலீஸாரே அவனை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். ஆனால், அவன் அப்பாவி' அவன் ஒரு டிரைவர்தான் என்பது நிருபணம் ஆனதும் அவனை விடுவித்து விட்டார்கள்... ஆனால், அந்த டிரைவருக்கு மன உளைச்சல் அதிகமானது. 'நான் என்ன திருடனா' என்னைப் போய் கைது செய்து விட்டார்களே.. எல்லாம் 'இந்தப் பக்கத்துவீட்டு பெரியவரால் தானே நடந்தது என்கிற கோபமும், ஆற்றாமையும் எழுந்தது. அவன் முதியவரின் மேல் மானநஷ்ட வழக்குத் தொடுத்தான். வழக்கு விசாரணைக்கு வந்தது. நீதிபதியிடம் முதியவர் சொன்னார்... **"நான் யாரையும் காயப்படுத்தவில்லை.. வாய் வார்த்தையாக எதையோ சொன்னேன் அவ்வளவு தான்".**

டிரைவரோ, போலீஸால் தான் அலைக் கழிக்கப்பட்டது, அந்த அவமானத்தால் மனது பாதித்தது பெரியவர் பரப்பிய வதந்தியால் தான் என்பதை எடுத்துச் சொன்னான். நீதிபதிக்கு டிரைவரின் நிலையும் பெரியவரின் வீம்பும் புரிந்தது. முதியவரை அழைத்து நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள் உங்கள் பக்கத்து வீட்டுக்காரனைப் பற்றி நீங்கள் சொன்ன அனைத்து விஷயங்களையும் ஒரு காகிதத்தில் எழுதி அந்த பேப்பரை துண்டு, துண்டாக கிழித்து போகிற வழியெல்லாம் ஒவ்வொரு துண்டாகப் போட்டுக் கொண்டே செல்லுங்கள் நாளை காலையில் வாருங்கள்" என்றார். அடுத்த நாள் அந்த முதியவர், டிரைவர் இருவரும் கோர்ட்டில் ஆஜரானார்கள். நீதிபதி முதியவரை அழைத்தார். ''நான் சொன்னது போலச் செய்தீர்களா''.....?


ஆமாம் ஐயா... நேற்று நீங்கள் வீசியெறிந்த காகிதத் துண்டுகள் அனைத்தையும் சேகரித்துக் கொண்டு வாருங்கள்.. அதன் பிறகு தீர்ப்பு சொல்கிறேன்....! அது எப்படி ஐயா முடியும்....? அந்தக் காகிதத் துண்டுகள் காற்றில் பறந்து சிதறி இருக்கும் அதைப் போய் எப்படிக் கண்டுபிடிப்பது...? முடியாதில்லையா...? அப்படித் தான் நீங்கள் சொன்ன வார்த்தைகளும் திரும்பப் பெறவே முடியாதவை.. ஒருவரின் வாழ்க்கையையே பாதிக்கும் ஆற்றல் கொண்டவை'' என்றார்.

படித்ததில் பகிர்ந்து கொள்ளப் பிடித்தது
**த.ஐயப்பன்** மேலாளர்,
(உணவு மேலாண்மைத் துறை)

ஊர் கதை பேசாதே

மகிழ்ச்சி

## எண்ணங்களை உயர்வாக்குவோம்...!







**"உன்னால் முடியும்... முயற்சி செய்" – ஒரு சிறு கதை**

கிராமத்தின் ஓரத்தில் இருந்தது ஒரு சின்ன வீடு. அந்த வீட்டில் வாழ்ந்தான் கார்த்திக்.**"நீ இதை செய்ய முடியாது"** என்பதே அவன் காதில் அதிகமாக விழுந்த வார்த்தை.

பள்ளியில் தோல்வி, நண்பர்களின் கிண்டல், வீட்டில் கவலை...
ஒரு நாள் அவன் மனசுக்குள் சொன்னான்:
**"நான் ஏன் முயற்சி செய்யவேண்டும்....?** எல்லாம் பயனில்லை.''

அன்று மாலை அவன் ஊருக்குப் புறம்பே இருந்த ஒரு மலைக்கு சென்றான்.
அங்கே ஒரு முதியவர், கல்லை உடைத்துக் கொண்டிருந்தார்.
ஒரு சின்ன சுத்தியலால்... பெரிய கல்லை....!

கார்த்திக் கேட்டான்:
''தாத்தா, இதை உடைக்க முடியுமா....? இத்தனை பெருசா இருக்கே....!''

முதியவர் சிரித்தபடி சொன்னார்:
''இந்த கல்லை நான் முதல் அடியில் உடைக்கல.
நூறு அடிகள் போட்றேன்.
ஆனா ஒவ்வொரு அடியும் முக்கியம்.''

அந்த வார்த்தைகள் கார்த்திக்குள் விழுந்து உடைந்தது... **பயம்.**

அடுத்த நாள் முதல் அவன் முயற்சி செய்ய ஆரம்பித்தான்.
தோல்வி வந்தது... மீண்டும் முயற்சி.
கஷ்டம் வந்தது... இன்னும் முயற்சி.

நாட்கள் கடந்தது.
ஒரு நாள்...
அவன் சொன்னான்:

''நான் முடியாது'' ன்னு நினைச்ச நாள்ல தான் தோத்தேன்.
''உன்னால் முடியும்... முயற்சி செய்''ன்னு நம்பின நாள்ல தான் ஜெயிச்சேன்.

**முயற்சி தோல்வி இல்லை....**
**முயற்சி தான் வெற்றியின் முதல் படி.**

படித்ததில் பகிர்ந்து கொள்ளப் பிடித்தது
**த.பைந்தமிழ்,** துணை மேலாளர்
அவசரச் சிகிச்சைப் பிரிவு

# எளியவரிடத்தில் இறைவனை காணலாம்



தஞ்சை பெரிய கோயில் கட்டி முடிக்க பட்டு குட முழுக்கு கும்பாபிஷேகத்துக்கு நாளும் குறிக்கப்பட்டு விட்ட நேரம் அது...

கோயில் எதிர்பார்த்தபடி நல்லபடியாய் கட்டி முடிக்க பட்ட சந்தோஷத்தில் ராஜா, **ராஜ ராஜ சோழன்** நிம்மதியா தூங்கும் போது... கனவில் இறைவன் ஆன பரமசிவன் அவன் முன்னே எழுந்தருளினார்......'ராஜா ராஜா.....!' என்றழைக்க... ராஜா ராஜா சோழன், ''இறைவா என் பாக்கியம் என்னவென்று சொல்வது... தாங்கள் எனக்கு காட்சி தந்தது நான் செய்த பாக்கியம்... தங்களுக்கு நான் கட்டிய கோயில் எப்படி இருக்கிறது...?... இந்த ஊரிலே எல்லோரும் வியந்து பார்க்கும் மிக பெரிய கோயிலாக கட்டியுள்ளேன்... அதற்க்கு 'தஞ்சை பெரிய கோயில்' என்று பெயர் சூட்ட போகிறேன்... மகிழ்ச்சி தானே தங்களுக்கு..?'' என்று கேட்டான் ஆனந்தமாக. இறைவன் சிரித்து கொண்டே, ம்..ம்..ம் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம்...! ஒரு மூதாட்டியின் காலடி நிழலின் கீழ் யாம் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம்... என்று கூறி மறைந்தார். ராஜா ராஜனின் கனவும் கலைந்தது.

விழித்தெழுந்த ராஜா ராஜன் தான் கண்ட கனவை பற்றி மறுநாள் அரசவையில் கூறி அந்த கனவுக்கு விளக்கம் கேட்டான். யாருக்கும் பதில் தெரியவில்லை. பின் நேராக கட்டி முடிக்க பட்ட தஞ்சை பெரிய கோயிலுக்கு சென்றான். கோயில் சிற்ப்பியிடம் தான் கண்ட கனவை கூறி விளக்கம் கேட்டான். சிற்பி தயங்கியவாறே, ''அரசே கடந்த மூன்று மாதங்களாக மோர் விற்கும் வயதான ஒரு ஏழை மூதாட்டி தினமும் மதிய வேளையில் இங்கு வருவார்... ஏழ்மை நிலையில் இருந்தாலும் தன் பங்குக்கு இந்த கோயிலுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று எண்ணி தான் விற்கும் மோரில் பாதியை காசுக்காகவும், பாதியை இந்த கோயிலுக்காக வேலை செய்யும் எங்களுக்கு குடிக்க இலவசமாக கொடுப்பார்... நாங்கள் காசு கொடுத்தாலும் வாங்க மறுத்து விடுவார்.

எதோ இந்த ஏழை கிழவியால் இந்த கோயிலுக்கு செய்ய முடிந்த தொண்டு என்று கூறி காசு வாங்க மறுத்திடுவார். இப்படி இருக்கும் போது போன வாரத்தில் ஒரு நாள், ஆலய சிற்பங்களின் எல்லா வேலையும் முடித்த எங்களுக்கு இறைவனின் கருவறையின் மேலிருக்கும் கல்லை மட்டும் சரி செய்யவே முடியவில்லை... நாங்களும் அதன் அளவை எவ்வளவோ முயற்சி செய்து அளவெடுத்து வைத்தாலும் ஒன்று கல் அளவு அதிகமாக இருந்தது அல்லது குறைவாக இருந்தது. எங்கே ஆலய பணி நடக்காமல் போய்விடுமோ என்று நாங்கள் கவலையுடன் இருந்தோம்...?

அப்பொழுது இந்த மோர் விற்கும் மூதாட்டி வந்து மோர் கொடுத்து கொண்டே, **ஏன் கவலையாய் இருக்குறீர்கள்...?** என்று கேட்டார்கள். நாங்களும் கல் சரி ஆகாத விஷயத்தை சொன்னோம். அதற்க்கு அவர்கள் என் வீட்டு வாசற்படியில் பெரிய கல் ஒன்று உள்ளது... நான் அதை தான் என் வீட்டுக்கு வாசற்படி போல் வைத்துள்ளேன். அதை வேண்டுமானால் எடுத்து பொருத்தி பாருங்கள் என்றார். நாங்களும் நம்பிக்கை இல்லாமல் அந்த மூதாட்டி சொன்ன கல்லை எடுத்து வந்து பொருத்தினோம்...

என்ன ஆச்சிரியம்...! கருவறையின் மேற் கூரைக்கு அளவெடுத்து வைத்தது போல் மிக சரியாக இருந்தது. அதைதான் இறைவன் தாங்களுக்கு உணர்த்தி இருப்பார் என்று அடியேன் நினைக்கிறன்... என்றான் சிற்பி. இதை கேட்டதும் ராஜா ராஜனுக்கு எல்லாம் புரிந்தது...

எவ்வளவு பொருள் செலவு செய்து கோயில் கட்டினாலும் இறைவன் நேசிப்பது அன்பான ஒரு ஏழையின் பக்தியை தான். ஆரவாரமாக பொருள் செலவு செய்து நான் கோயிலை கட்டினாலும், அமைதியாக ஏழ்மை நிலையிலும் அந்த மூதாட்டி விற்க இருந்த மோரை கோயில் திருப்பணி செய்வோருக்கு அர்ப்பணித்தாரே..'' என்று கண்ணீர் மல்கி...

பின் சுதாரித்து தன் அமைச்சரை அழைத்து, ''அமைச்சரே கும்பாபிஷேகம் நடக்கும் நன்னாளில் அந்த மூதாட்டியை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்... நான் வெண்குடை ஏந்தி அந்த அம்மையாரை வைத்து கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு செய்யுங்கள்...

**இந்த கோயில் கட்டியது அந்த அம்மையார் தான்... நான் அல்ல... இதற்கு இறைவனே சாட்சி என்றான்...**

படித்ததில் பகிர்ந்து கொள்ளப் பிடித்தது
**M.பிரதாப்,** துணை மேலாளர்
தரமேம்பாட்டுத் துறை

ஏக்கம் தவிர்

மகிழ்ச்சி

# இப்படியுமா...? ஒரு மனிதர்...!



மகா கஞ்சன் ஒருவன் ஒரு நாள் விமான நிலையத்தைப் பார்ப்பதற்காக தன் மனைவியோடு வந்திருந்தான்.. விமானம் மேலே கிளம்புவதையும், வானில் வட்டமிடுவதையும், கீழே இறங்குவதையும், இருவரும் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்..

அவர்களின் ஆர்வத்தைப் பார்த்த அங்கிருந்த விமானி ஒருவர், **"நீங்கள் இருவரும் வாருங்கள்...** இந்த விமானத்தில் ஏறி, வானத்தில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வரலாம் ஆளுக்கு நூறு ரூபாய் தான்'' என்றார்.. கஞ்சனுக்கு ஆர்வம் தான். இதற்காகவா இருநூறு ரூபாய வீண் செலவு செய்வது என்று நினைத்து, **"நாங்கள் வரவில்லை,"** என்றான்..

எப்படியும் அவர்களிடம் பணம் பெற நினைத்த விமானி, ''நீங்கள் பணம் தர வேண்டாம்.. எந்தக் கட்டணமும் இல்லாமல், உங்களை இனாமாகவே விமானத்தில் ஏற்றிச் செல்கிறேன்.. ஆனால் ஒரு நிபந்தனை, வானத்தில் விமானம் பறக்கும்போது, என்ன நடந்தாலும், நீங்கள் சிறு சத்தம் கூடப் போடக் கூடாது.. அப்படி சத்தம் போட்டுவிட்டால், கட்டணமாகிய இருநூறு ரூபாயை நீங்கள் கொடுத்துவிட வேண்டும். சம்மதம் தானே....?'' என்றார்..

**"சம்மதம்"** என்றான் கஞ்சன். தன் மனைவியுடன், விமானத்தில் ஏறி அமர்ந்தான்; விமானம் பறக்கத் தொடங்கியது.. வானத்தில் விமானம் குட்டிக்கரணம் போட்டது. தலை கீழாகப் பறந்தது. சீறிப் பாய்ந்தது. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்த கஞ்சன், சிறு ஓசை கூட எழுப்பவில்லை.

வேறு வழியின்றி விமானத்தைத் தரை இறக்கினார் விமானி.. கஞ்சனின் கையைக் குலுக்கி, ''ஆமாம், பயமுறுத்தும் விமான விளையாட்டுகளை நான் வானத்தில் செய்யும்போது, இதுவரை எனக்குத் தெரிந்து சிறு ஓசைகூட எழுப்பாது இருந்தீர்கள்.. என் பாராட்டுக்கள். எப்படி இது உங்களால் முடிந்தது...?'' என்று கேட்டார் விமானி..

நான் கூட, ஒரே ஒரு சமயம், என்னை அறியாமல் கத்த இருந்தேன். எப்படியோ முயன்று அடக்கிக் கொண்டேன்'' என்றான் கஞ்சன். எப்போது....?'' என்று கேட்டார் விமானி.. **"என் மனைவி, விமானத்திலிருந்து தவறிக் கீழே விழுந்த போது"** என்றான் கஞ்சன்..

இப்படியும் சில பிறவிகள், இம்மனித வாழ்வில் எது முக்கியம் என உணராமல், பணம் ஒன்றே பிரதானம் என்று வாழ்ந்து மடிகின்றனர். வாழும்போதே மற்றவர்களையும் சாகடிக்கின்றனர். மற்றவர் உயிரை மட்டுமல்ல, அவர்கள் மேல் மற்றவர்கள் வைத்துள்ள நம்பிக்கை, பாசம், நேசம் மற்றும் அன்பையும் ஒவ்வோரு கட்டத்தில் சாகடிக்கின்றனர்.

படித்ததில் பகிர்ந்து கொள்ளப் பிடித்தது
**அ.கமலக்கண்ணன்,** மேலாளர்
பராமரிப்புத்துறை

# திருந்த வேண்டியது நாம் தான்...!



ஒரு ஊரில் ஒரு கோடீஸ்வரன் இருந்தான். அவனுக்குக் கடுமையான தலைவலி ஏற்பட்டது. பல ஊர்களிலிருந்து மிகப் பெரிய வைத்தியர்கள் வந்து பார்த்தும், வண்டி வண்டியாக மருந்துகள் சாப்பிட்டும் அந்தத் தலைவலி குணமாகவில்லை.

ஒருநாள் அந்த ஊருக்கு ஒரு சன்யாசி வந்தார். அவர் பணக்காரனை வந்து பார்த்தார். பார்த்துவிட்டு, அவருக்கு ஏற்பட்ட தலைவலிக்குக் கண்ணில் இருக்கும் ஒரு நோயே காரணம் என்று கூறினார். அந்தக் கண்ணைக் குணப்படுத்த ஒரே ஒரு வழிதான். அந்தப் பணக்காரன் பச்சை நிறத்தைத் தவிர வேறெதையும் பார்க்கக்கூடாது என்று கூறிவிட்டுப் போய்விட்டார். பணக்காரன் முதலில் தன் வீட்டில் இருக்கும் எல்லாவற்றையும் பச்சையாக மாற்றினான். தலைவலி குணமாகி விட்டது. சன்னியாசி கூறியது சரிதான்.

உடம்பு சரியாகவே... வீட்டைவிட்டு வெளியே போகத் தொடங்கினான். வெளியே போனால், இயற்கை எல்லா வண்ணங்களையும் அள்ளித் தெளித்திருந்தது. ஆனால், அவற்றைத்தான் அவன் பார்க்கக்கூடாதே.. நிறையப் பச்சைப் பெயிண்டையும் பிரஷ்ஷையும் கொடுத்து சில ஆட்களை நியமித்தான். அவன் போகும் வழியில் இருக்கும் ஆடு, மாடு, மனிதர், குடிசை, வண்டி, மேசை, நாற்காலி எல்லாவற்றுக்கும் பச்சை நிறத்தை அடிப்பது அவர்களுடைய வேலை. அவர்களும் முதலாளி சொன்னபடியே செய்து வந்தார்கள். சில மாதம் கழித்து மீண்டும் சன்னியாசி அதே ஊருக்கு வந்தார். வேலையாட்கள் அவரைத் தடுத்து நிறுத்தி, அவர் மீதும் பச்சை வண்ணம் அடிக்கப் போனார்கள்.

சன்னியாசிக்கு ஆச்சரியமாகிவிட்டது. காரணம் கேட்டார். அவர்கள் **'தங்கள் முதலாளியின் கட்டளை இது'** என்று கூறினார்கள். சன்னியாசி அதற்கு, **"என்னை உங்கள் முதலாளியிடம் அழைத்துப் போங்கள்"** என்றார். பணக்காரனுக்குத் தன் நோயைக் குணப்படுத்திய சன்னியாசி மீண்டும் வந்ததைக் கண்டு ஒரே மகிழ்ச்சி. வணங்கி அவரை உபசரித்தான்.

''இந்த ஊரில் எல்லாவற்றுக்கும் ஏன் பச்சைப் பெயிண்ட் அடிக்கிறீர்கள்....?'' என்று சன்னியாசி கேட்டார். ''ஐயா, நீங்கள் சொன்னபடிதான் நான் செய்கிறேன்'' என்றான் அவன் மிகப்பணிவோடு. ''நான் என்ன சொன்னேன்.....?'' என்றார் சன்னியாசி. **"பச்சைநிறத்தைத் தவிர வேறெதையும் நான் பார்க்கக்கூடாது என்று கூறினீர்களே ஐயா**'' என்றான்.

''மகனே.. நீ லட்ச லட்சமாகப் பணத்தைச் செலவழித்திருக்க வேண்டாம். ஒரு நூறு ரூபாய் கொடுத்து பச்சைக் கண்ணாடி வாங்கியிருந்தால், உன்னைச் சுற்றியிருக்கும் பொருள்களெல்லாம் பிழைத்திருக்கும். உன் பணமும் வீணாகி இராது. உன்னால் இந்த உலகம் முழுமைக்கும் பச்சைப் பெயிண்ட் அடிக்கமுடியுமா....?'' என்று கேட்டார் சன்னியாசி.

நம்மில் பலரும் இந்தக் கதையில் வரும் பணக்காரனைப் போலத்தான் இருக்கிறோம். நம்மைத் திருத்தி அமைத்துக் கொள்வதற்கு பதிலாக, உலகத்தை எப்படியாவது மாற்றியமைத்து விடுவது என்று மிகவும் முயற்சிக்கிறோம். அது சாத்தியமல்ல. மிகுந்த காலமும், உழைப்பும் விரயமான பிறகு தான் **'திருந்த வேண்டியது நாம்தான்'** என்பது புரிகிறது.

படித்ததில் பகிர்ந்து கொள்ளப் பிடித்தது
**மு.பக்ருதீன் அலி அகமது,**
வடிவமைப்பாளர், தரமேம்பாட்டுத் துறை.

# இயற்கை வளங்களை காப்போம்.....!



**அது ஊருக்கு வெகு தூரத்தில் அமைத்திருந்த ஒரு பெரிய காடு. அந்த காட்டில் ஓங்கி உயர்த்த பல அறிய வகை மரங்களும், விலை மதிப்புமிக்க மரங்களும், சிறிய வகை மரங்கள், செடிகள், கொடிகள் என்று மிகவும் பசுமையாக காட்சியளித்தது.**

அந்த காட்டில் விலங்குகளும் தேவையான உணவும், தண்ணீரும் அங்கேயே கிடைத்ததால் அவைகள் மிகவும் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் அந்த தூரத்து ஊரில் சில இளைஞர்கள் ஒன்று கூடி பேசிக் கண்டு இருந்தார்கள். அவர்கள் அனைவருமே நல்ல வசதியான குடும்பங்களில் பிறந்து வளர்த்தவர்கள். அவர்களில் அதிகமானோர் வெளிநாடுகளில் படித்துவிட்டு ஊர் திரும்பியிருந்தார்கள். அவர்கள் பேச ஆரம்பித்தவுடன் அவர்களுக்கு நேரம் போனதே தெரியாமல் பேசிக்கொண்டே இருந்தார்கள். வெளிநாட்டில் அவர்களுக்கு கிடைத்த அனுபவங்கள், அங்கு கல்லூரியில் நடந்த நிகழ்வுகள் என்று அனைத்தையும் ஒருக்குகொருவர் பகிர்ந்து கொண்ட பொழுது மகிழ்ச்சியாக மாறி நாம் அனைவரும் சேர்ந்து எங்காவது சுற்றுலா சென்று வரலாமா..? என்று ஒரு இளைஞர் கேட்டவுடன் அனைவரும் ஒரே குரலாக செம ஐடியாடா எப்ப கிளம்பலாம்...?

என்று எல்லாரும் பேசி முடிவெடுப்போம் என்று கூறிவிட்டு அது சரி... நாம் எந்த ஊருக்கு செல்லலாம் என்று யோசித்தீர்களா...? என்று ஒருவர் கேட்கவும், அவரவர் தங்களுக்கு தோன்றிய சுற்றுலா தளங்களை பற்றி கூறிக்கொண்டு இருந்தார்கள். அதில் ஒரு இளைஞர் மட்டும் ஏன் நாம் அங்கேயெல்லாம் செல்ல வேண்டும். இங்கு நம் ஊருக்கு சற்று தூரத்தில் ஒரு பெரிய காடு இருக்கிறது. நாம் சென்று அதை பார்த்து வரலாம். எனக்கு சிறு வயதில் இருந்தே அந்தக் காட்டை சுற்றி பார்க்க வேண்டும் என் ஆசை என்று கூறினார்.

உடனே அனைவரும் நல்ல யோசனை கூறினாய் நண்பா...! நாம் அனைவரும் அங்கயே செல்லலாம் என்று ஒரு மனதாக முடிவெடுத்தார்கள். சில நாட்கள் கழித்து அவர்கள் காட்டை சுற்றிப் பார்க்க எதுவாக ஜீப் ஒன்றை எடுத்துக்கொண்டு, குடிக்க தண்ணீர் நொறுக்கு தீனீகள், பாதுகாப்பிற்காக அவர்களில் முன்னோர்கள் வைதிருந்த வேட்டைத்துப்பாக்கி என்று அனைத்தையும் எடுத்துகொண்டு சென்றார்கள். அதிகாலையிலேயே கிளம்பி இரவுக்குள் வீட்டுக்கு வந்து விட வேண்டும் என்று கூறி பெற்றோர் அனுப்பி வைத்தார்கள். அவர்களும் மிகுந்த மகிழ்ச்சியோடு கிளம்பி சென்றார்கள். ஜீப்பில் வேகமாக சென்றாலும் அங்கு சென்று சேர்வதற்கு 3 மணி நேரம் ஆகிவிட்டது. அவர்கள் காட்டின் வெகு அருகில் சென்றுவிட்டார்கள். காட்டின் அருகில் சென்றவுடன் அங்கு தென்பட்ட பசுமை அவர்கள் கண்களுக்கு விருந்தானது. அங்கு நிறைந்திருந்த குளிர்ச்சியான சூழ்நிலை அவர்களுக்கு ஆனந்தத்தை தந்தது. நண்பன் ஆங்கில படங்களில் பார்த்து போல் எவ்வளவு பெரிய காடு பார்த்தாயா...? என்று ஒரு இளைஞர் கூறவும். மற்றவர்களும் ஆமாம் என்று கூறினார்கள். அங்கு காட்டின் ஓரங்களில் இருந்த மரங்களில் இருந்த குரங்குள் அந்த இளைஞர்களையும், ஜீப்பையும் பார்த்தவுடன் இது என்ன நாம் புதிதாக பார்ப்பது என்பது போல் ஒன்றையொன்று ஜீப்பில் அருகில் வந்து பார்த்து சில குட்டிகுரங்குகள் மரக்கிளைகளில் தாவி சத்தமெழுப்பியது. அந்த இளைஞர்கள் காட்டின் உள்ளே செல்ல எதாவது வழி இருக்கிறதா...? என்று காட்டின் வெளிப்புறத்தில் சுற்றி பார்த்தார்கள். அப்படி எதுவும் தென்படவில்லை. அங்கு மனிதர்கள் யாரும் வந்து சென்றதற்கான அடையாளமே இல்லை. காடு வெகு அழகாக அடர்த்தியாக இருந்தது.

நாம் இவ்வளவு தூரம் வந்ததும் காட்டின் உள்ளே சென்று பார்க்க முடியவில்லையே என்று வருத்தம் அவர்களுக்கு எழுந்தது. மீண்டும் மீண்டும் முயன்று பார்த்த விட்டு கிளம்பி விட்டார்கள். அவர்களின் முகங்களில் மிகுந்த வாட்டம் தென்பட்டது. அவர்கள் ஊரிலிருந்து கிளம்பி வந்த போது இருந்த உற்சாகமும், மகிழ்ச்சியும் சுத்தமாக வடிந்து போனது. ஊருக்கு திரும்பிய போது இரவு வெகு நேரமாகி விட்டதால் அனைவரும் அவரவர் வீட்டிற்கு சென்று விட்டார்கள். மறுநாள் காலையில் வீட்டில் இருந்தவர்கள் கேட்ட போது அவர்களால் உற்சாகமாக பதில் சொல்ல முடியவில்லை. எங்களால் காட்டின் உள்ளயே செல்ல முடியவில்லை. அவ்வளவு தூரம் சென்றும் காட்டை சுற்றி பார்க்க முடியாமல் திரும்பி விட்டோமே என்று கவலையாக இருக்கிறது... என்று கூறிவிட்டு நண்பர்கள் வழக்கமாக சந்தித்துப்பேசும் இடத்திற்கு வந்தார்கள்.

அவர்கள் நேற்று நடத்தைப்பற்றி பேசிக்கொண்டு இருக்கும்போது ஊரில் இருந்த மற்ற நண்பர்களும் சில பெரியவர்களும் அங்கு வந்தார்கள். காட்டிற்கு சென்று வந்ததை பற்றி கேட்டதும் அவர்கள் அங்கு நடத்தை பற்றி கூறினார்கள். இதை கேட்ட சில நல்ல மனம் கொண்ட மனிதர்கள் சரி அங்கையாவது கொஞ்சம் மரங்கள் மனிதர்கள் கண்களில் படாமல் இருப்பதால்தான் இங்கு மலை பெய்கிறது. இருக்கட்டும் என்று கூறி மகிழ்ச்சி அடைத்தார்கள்.

இதையெல்லாம் கேட்டு கொண்டு இருந்த சில சுயநலவாதிகள் இதை எப்படி நமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று குறுக்கு வழியில் யோசிக்க ஆரம்பித்தனர். அவர்களில் சிலர் இணைத்து பேசி முடிவெடுத்து நாம் ஒருநாள் அந்தக் காட்டிற்கு சென்று வரலாம் என்று கூடிப்பேசிக்கொண்டு நான்கு நாட்கள் கழித்து ஊருக்குள் யாருக்கும் தெரியாமல் கிளம்பி சென்றார்கள். அவர்கள் அங்கு சென்று பார்த்தவுடன் அவர்கள் மனதில் ஆனந்தமும், பேராசையும் போட்டி போட்டு கொண்டு பொங்கியது. காட்டை பார்த்துவிட்டு ஒரு திட்டத்துடன் அவர்கள் ஊருக்கு திரும்பினார்கள்.

பிறகு இவர்களைப்போலவே கெடுதல் புத்தி கொண்ட இன்னும் சிலரை இவர்கள் ஆசை வரத்தைக்கூறி இவர்களோடு சேர்த்து கொண்டனர். சிறுது நாட்கள் கழித்து அவர்கள் அனைவரும் இணைத்து மரங்களை வெட்டுவதற்கு ஆயுதங்களையும், மரங்களை எடுத்து செல்வதற்கு வாகனத்தையும் எடுத்து கொண்டு கிளம்பி காட்டிற்கு சென்றனர். காட்டை நெருங்கியவுடன் நாம் உள்ளே செல்வதற்க்கு முதலில் பாதை ஏற்படுத்த வேண்டும். என்று கூறிக்கொண்டு முன்புறம் இருந்த சிறிய மரங்களை வெட்டி சாய்த்தார்கள். அந்த மரங்களின் கூடு கட்டி குடியிருந்த பறவைகள் திடீரெண்டு இங்கு என்ன நடக்கிறது என்று புரியாமல் தவித்து அங்கும் இங்குமாக பறந்து கொண்டிருந்தன.

குரங்குகளும் அங்கிருந்த வேறு மரங்களில் அமர்ந்து கொண்டு இவர்கள் என்ன செய்து கொண்டு இருகிறார்கள் என்று புரியாமல் பார்ததுக்கொண்டு இருந்தன. அந்த கேடு கெட்ட மனிதர்கள் தினமும் வந்து அங்கு இருந்த விலை உயர்ந்த மரங்களை வெட்டி விற்று கொள்ளை லாபம் சம்பாதித்தனர். அந்தக்காடு அங்கு இருந்த மரங்களையும், அதன் அழகையும், பசுமையும், குளிர்ச்சியையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தது. விலங்குகள் காட்டின் அளவு குறையக்குறைய அவைகள் மரங்கள் அடர்ந்து இருந்த பகுதியை நோக்கி செல்ல ஆரம்பித்தன.

